REGD. NO. M.:6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆவணி 10உ திங்கள் (26—8—57) ★ ★ வெளியூர்: ஆவணி 11உ செவ்வாய் (27—8—57) [இதழ் 62

விளம்பரக் கட்டணமாக ரூ. 31 இலட்சம்!

புதுடில்லி, ஆக. 24—

டெல்லி சர்க்கார், இந்தியாவெங்கனுமுள்ள பத்திரிகைகளுக்கு விளம்பரக் கட்டணமாக 1956—57-ம் ஆண்டில் ரூ. 31,00,027 தந்தது என்று தகவல் ஒலிபரப்பு இலாகா மந்திரி டாக்டர் பி. வி. கேஸ்கர், மக்கள் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலாகக் கூறியிருக்கிறார்.

நிலக்கரி எடுக்குமுன் எரிமலை குமுறுவதா?

பீகார் சர்க்கார் பணிகிறது

பஞ்சப்படியை உயர்த்த சம்மதம்

பாட்னா, ஆக. 22—

மாதம் ரூ. 100-க்கு மேல் சம்பளம் பெறாத சர்க்கார் ஊழியர்கள், ஸ்தலஸ்தாபன ஊழியர்கள் அனைவருக்கும் கிராக்கிப்படி ரூ. 5 உயர்த்தித் தரப்படும் என பீகார் மாநில சர்க்கார் அறிவித்திருக்கின்றனர்.

கிராம ஊழியர்களில் ஒரு பிரிவினருக்கும் ரூ. 3 தரப்படும் என்று சர்க்கார் அறிக்கை கூறுகின்றது.

சர்க்கார் ஊழியர்கள், தங்களின் சம்பள உயர்வு, கிராக்கிப்படி உயர்வு போன்ற கோரிக்கைகளுக்காக, ஆகஸ்டு 27-ந் தேதி முதல் 'உள்ளிருப்பு' வேலை நிறுத்தம் செய்வது என்று முடிவு செய்து சர்க்காருக்குத் தெரிவித்திருந்தனர்.

ஊழியர்களைத் திருப்திப்படுத்தும் நோக்குடன் சர்க்கார் இந்தப் பஞ்சப்படி உயர்வு குறித்து அறிவித்திருந்தாலும், சம்பளக் கமிஷன் முதலிய பிரதான கோரிக்கைகள் பற்றி சர்க்கார் எதுவும் தெரிவிக்கவில்லை.

பத்து 'நயே பைசே' நாணயங்களில், கள்ள நாணயங்கள் எவையும் செலாவணியில் இருந்துவருவதாக சர்க்காருக்குத் தெரியவில்லையாம்!

'புராணத்தில் கண்ட நந்தனாரை 'தில்லை ஜோதி'யில் சாகடித்ததைப் போல....'

'நிலக்கரிப் பகுதி மக்களின் வாழ்வைச் சாகடிப்பதா?'

நெய்வேலி கருப்புத் தங்கத்திடையே அண்ணா

நெய்வேலி, ஆக. 25—

நெய்வேலியில் 21—8—57 இரவு 7 மணியளவில் நெய்வேலி தி. மு. கழகச் சார்பில் சுரங்கத்தால் பாதிக்கப்பட்ட கிராம மக்களின் பாதுகாப்புச் சங்கத் தலைவர் தோழர் எம். செல்வராசு எம்.எல்.ஏ. அவர்கள் தலைமையில் சுமார் ஐம்பதினாயிரம் மக்கள் நிறைந்த ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தலைவர் முன்னுரையாகப் பேசுகையில், சுரங்கத்தால் பாதிக்கப்பட்ட கிராம மக்களின் குறைகளையும் பாதுகாப்புச் சங்க நோக்கங்களையும் கூறி, கிராமங்களின் நிலம், வீடு, பலன்தரும் மரங்கள் முதலியவற்றின் நஷ்டஈட்டை 1947-ம் ஆண்டின் மதிப்பின்படி தருவது சரியில்லை எனவும், விலைவாசி ஏறியுள்ள தற்கால மதிப்புப்படி நஷ்டஈடு தரவும், நல்லமுறையில் இப்பகுதி மக்களை வெளியேற்றி புனர்வாழ்விற்கு அடிப்படை உரிமைகளை வழங்குமாறும் சர்க்காரைக் கேட்டுக்கொண்டார்.

அடுத்து, சட்டமன்ற உறுப்பினர் தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள், திட்டத்தை விளக்கி, இங்கு பணியாற்றும் முக்கிய அதிகாரிகளின் பொறுப்பற்ற போக்கையும், பயமுறுத்தலான பேச்சுக்களையும், காண்டிராக்டரின் ஊதாரித்தனத்துக்கு ஒத்து ஊதும் அதிகாரிகளின் போக்கையும் கண்டித்து, திட்டம் நல்ல முறையில் நிறைவேற இப்பகுதி உழவர் பெருமக்களின் கண்ணீரைத் துடைத்து அவர்களின ஒத்துழைப்பைப் பெற்று மக்களின் ஜீவாதார உரிமைகளை நியாயமாகத் தீர்த்த பின்பே, நிலக்கரியைத் தோண்டவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

பின்பு கடலொலி போன்ற கர ஒசைகளுக்கிடையே அண்ணா அவர்கள் மேடையில் தோன்ற பல கிளைக் கழகங்களின் சார்பில் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு வாழ்த்தொலிகள் முழங்கின.

சுரங்கத்தால் பாதிக்கப்பட்ட கிராமப் பாதுகாப்புச் சங்கத்தால் அண்ணா அவர்களுக்கு வரவேற்பும், ஒரு மகசரும் படித்துக் கொடுக்கப்பட்டன.

பின்பு அண்ணா அவர்கள் பேசியதாவது:—

"சோகம் நிறைந்த உழவர் பெருங்குடி மக்களும், தாய்மார்களும் இந்த இவ்வளவு பெருவாரியாகக் கூடுவார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. உங்கள் உள்ளங்களில் கவலை தேங்கியுள்ள நிலையிருந்தும் ஆர்வமுடன் குழுமி இருக்கிறீர்கள். உங்கள் குறைகளை நான் அறிந்துள்ளேன். சட்டமன்றத்திலும் தோழர் செல்வராசு அவர்கள் அவசரத் தீர்மானம் கொண்டுவர முயன்றும் சர்க்கார் அதற்கு இணங்கவில்லை.

"நீங்கள் படித்துத்தந்த 'மகசர்' என்னை மிகமிகக் கவலைகொள்ளச் செய்திருக்கிறது. உள்ளபடியே நான் உங்களைக்காண வேதனையும் வருத்தமும் அடைகிறேன்.

"இங்கு துவக்கப்பட்டுள்ள சுரங்கத் திட்டத்திற்கு முக்கிய காரணமாக நின்றவர்கள் தி. மு. கழகத்தவர்தான் என்று சொல்லிக்கொள்ள பெருமை அடைகிறேன். அதே நேரத்தில் உங்கள் வாழ்வு சீர்குலையும் நிலையில் திட்டம் துவக்கப்படுவதைக் காண வெட்கமும் துக்கமும் அடைகிறேன்.

"பல இடங்களில் எங்கள் கூட்டம் நடைபெறும்போதெல்லாம் தென்னகம் வாழ, தொழில்வளம் காண, இந்த நெய்வேலித் திட்டத்தையேனும் நிறைவேற்றும்படி சர்க்காரை இடித்திடித்து வலியுறுத்தினோம்; 'எதேது; இத்திட்டம் நிறைவேறாவிட்டால் அண்ணாதுரை குரல் நாட்டில் வலுவடைந்து, திராவிட நாடு பிரிவினை கோரிக்கை நம்பிக்கையைப் பெற்றுவிடுமே' என்ற அச்சத்தால் இத்திட்டம் துவக்கப்பட்டது; ஆயினும், இன்னும் இத்திட்டம் ஆமை வேகத்தில் செல்வதைத்தான் பார்க்கிறேன்; மக்கள் அழுகுரலையும் கேட்கிறேன்.

"இத்திட்டத்திற்குத் தேவையான நிலம், வீடு, உடைமைகள் யாவும் கொடுக்கத் தயாராக உள்ள உங்களை மிகமிகப் பாராட்டுகிறேன்; அது நாட்டிற்குச் செய்யும் தொண்டு என்றே மதிக்கிறேன்.

"உங்கள் மனமுவந்த தொண்டிற்கு ஈடான நல்ல பலனை அடையமுடியாமல் தடுக்கும் ஒருசில சுயநலமிகளின் அதிகார ஆணவத்தைக் காணும்போது, நமது சர்க்காரின் அலட்சியமும், அதற்கு சட்டமும் துணையாவதையும் கண்டுதான் நான் வருந்துகிறேன்.

(4-ம் பக்கம் பார்க்க)

நங்கவரம் உழவர் அறப்போரில் திருப்புமுனை?

சமரசம் தோற்றது; மலபார் போலீஸ் படை குவிகிறது!

(நமது நிருபர் டிரங் செய்தி)

திருச்சி, ஆக. 26—

திருச்சி மாவட்ட நிலப்பிரபுக்கள்—உழவர் தகராறில் சமரசம் காண, மாவட்ட கலெக்டரின் உதவி அதிகாரிகள் கூட்டிய மாநாடு, நிலப்பிரபுக்களின் பிடிவாதத்தின் காரணமாக மீண்டும் முறிந்துவிட்டது. உழவர்கள் சமரசத்திற்குவர எப்பொழுதும்போல் இணக்கங் காட்டியும், பயன் ஏற்படவில்லை.

உழவர்களின் உரிமையை மறுத்துவருவதில் நிலப்பிரபுக்கள் பிடிவாதம் காட்டிவருவதற்குக் கொஞ்சமும் பின்வாங்காத நிலையில், உழவர்களும் தங்கள் உரிமையைப்பெற்றுத் தீருவது என்பதில் முன்னிலும் கூடுதலான நெஞ்சத் துணிவுடன் இருந்துவருகின்றனர்.

இந்நிலையில் ஏற்கனவே பாதுகாப்பிற்காக இப்பகுதியில் இறக்குமதி செய்யப்பட்டிருந்த போலீஸ் படையினரை சென்னை அரசாங்கம் இரவோடு இரவாகத் திரும்பப் பெற்றுவருகிறது. அத்துடன் அவர்களுக்குப் பதிலாக மலபார் போலீஸ் படையினரை அரசாங்கம் குவித்து வருகிறது.

இந்தப் போலீஸ் மாற்றம், உழவர்களின் அறப்போரில் அரசாங்கம் கொண்டுள்ள புதிய மனப்போக்கையும், இனி எடுக்கக்கருதி இருக்கும் நடவடிக்கையையும் விளக்குவதாக அமைந்திருக்கிறது என்று உழவர் முன்னேற்ற சங்கத்தினர் கருதுகின்றனர். அதாவது, இனி அரசாங்கத்தின் அடக்குமுறை தலைவிரித்தாடக்கூடும் என்றே உழவர்களில் பலர் நம்புகின்றனர்.

நங்கவரம் அறப்போர்

நூற்றுக்கணக்கான பெண்கள் உட்பட உழவர்கள் வயலில் இறங்கி வேலைசெய்தனர்

திருச்சி, ஆக. 26—

குளித்தலை வட்ட விவசாயிகள் முன்னேற்ற சங்கம் துவக்கியுள்ள அறப்போரின் இரண்டாவது நாளான 24—8—57 அன்று 110 பெண்கள் அறப்போரில் ஈடுபட்டனர். அவர்கள் வயல்களில் இறங்கி வேலை செய்தனர். யாரும் கைது செய்யப்படவில்லை.

மூன்றும் நாள்

மூன்றும் நாளான நேற்று 210 பெண்கள் உள்பட 420 பேர் அறப்போர்ச் சின்னங்களை அணிந்து, வயல்களில இறங்கி வேலை செய்தனர்.

நங்கவரம், மேல்நங்கவரம், கோவிந்தனூர், அணைஞ்சானூர் ஆகிய கிராமங்களில் உழவர்கள் இந்த அறப்போரிலீடுபட்டனர்.

விவசாயிகள் சங்கத் தலைவர் முத்துகிருஷ்ணன், மற்றும் தோழர்கள் மு. கருணாநிதி, அன்பில் தருமலிங்கம், முத்து ஆகியோர் அறப்போரைக் கண்காணித்து அமைதிகாத்து வருகின்றனர்.

திருச்சிமாவட்ட தி. மு. க. செயற்குழு ஆதரவு

2,000 தொண்டர்களைத் திரட்ட முடிவு

திருச்சி, ஆக. 26—

நேற்று பிற்பகல் திருச்சி மாவட்ட தி. மு. க. செயலாளர் தோழர் அன்பில்-தர்மலிங்கம் அவர்கள் தலைமையில், மேற்படி கழகச் செயற்குழு கூடியது.

நங்கவரம் உழவர் அறப்போரை ஆதரித்தும், நிலப்பிரபுக்களின் பிடிவாதப் போக்கைக் கண்டித்தும், தேவைப்படுமானால் அறப்போருக்காக பொதுமக்களிடமிருந்து நிதி திரட்டுவது என்றும், கழகத்தின் சார்பில் அறப்போரிலீடுபட வேண்டிய கட்டாயம் ஏற்படுமானால் அதற்காக 2,000 தொண்டர்களைத் திரட்டுவது என்றும் குழு முடிவு கட்டியுள்ளது.

மேற்படி பணிகளைத் திறம்பட நிறைவேற்றி வைப்பதற்கென சிறு குழு ஒன்றையும் செயற்குழு உருவாக்கி உள்ளது.

(க. தி.)

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 26—8—57 திங்கள்

ஊதியக் குழுவின் பொறுப்பு

தனது அரவணைப்பில் பணி புரிந்துவரும் ஊழியர்களின் தீவிரமான கிளர்ச்சிக்கிணங்கி இரண்டாவது ஊதிய ஆய்வுக் குழுவை இந்தியப் பேரரசு நியமித்து இருக்கிறது. அதில் இடம் பெறும் உறுப்பினர் களின் பெயர்களையும் இந்தியப் பேரரசு அறிவித்துவிட்டது.

அக்குழு உடனடியாகப் பணி யாற்றத் தொடங்கிவிடக்கூடும். இந்தியப் பேரரசினர் குறிப் பிட்டுள்ள துறைகளை, தனது பணிக்குரிய பக்கத்துணைகளா கக்கொண்டு, தன்னிடம் ஒப் படைக்கப்பட்டுள்ள பொறுப் பினை விரைவில் அக்குழு நிறை வேற்றிவைக்கவும்கூடும். அதற் கேற்பவே பேரரசின் கோரிக் கையும் அமைந்திருக்கின்றது.

விரிவாக விசாரணை செய்து, தனது உருப்படியான சிபார்சு களைச் செய்வதில், குழுவிற்குக் காலதாமதம் ஆவது எதிர்பார்க் கக்கூடியதே யாகும். அதை எதிர்பார்த்துத்தான், இடைக் கால உதவி வேண்டும் என்று மத்திய அரசாங்க ஊழியர்கள் பிடிவாதமாகக் கோரிவந்தனர். அக்கோரிக்கையை ஒப்புக்கொண் டதற்கு அறிகுறியாக, இடைக் கால நிவாரணம் குறித்தும், அது வழங்கப்படுவதற்கான கால அளவு குறித்தும் வரை யறுத்துக் கூறும் பொறுப்பை யும் அக்குழுவிடம் இந்தியப் பேரரசு ஒப்படைத்திருக்கின் றது.

இரண்டாவது ஊதிய ஆய்வுக் குழுவில், அரசாங்க ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த எவரும் உறுப்பினராக இடம் பெற்றி ருக்கவில்லை என்று குறை கூறப் படுகிறது. அது ஒன்றைத் தவிர, மேற்படி குழு அமைப் பிலோ அல்லது அதனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணி யின் தன்மையிலோ, மத்திய அரசாங்க ஊழியர்களுக்கு அதிருப்தி இருப்பதற்கு இட மில்லை.

இந்தியப் பேரரசின் மேற் பார்வையில் பணிபுரிந்துவரும் ஊழியர்களின் தேவைகளைப் பொறுத்தவரையில், மேற்படி குழுவின் மூலம் பெரும் அள வில் பரிகாரம் கிடைப்பது எதிர்பார்க்கக்கூடியதே. ஆனால், மத்திய அரசாங்க ஊழியர்களைப் போன்றே, நிரந்தரமான மாத ஊதியத்தை மட்டுமே என்றென் றும் நம்பி வாழ்ந்துவருகின்ற அரசாங்கத் தொடர்பற்ற ஊழி யர்களுக்கு, மேற்படி குழுவின் முடிவால் காதொடிந்த ஊசியள வும் பயன் கிடைக்கப்போவது கிடையாது. அதுபோன்றே, அம்முடிவினுல், பொது மக் களுக்கும் கிடைக்கவிருக்கும் புது இலாபம் எதுவுமில்லை.

இந்தியப் பேரரசின் அரவ ணைப்பில் பணிபுரிந்து வருபவர் கள் தொகை ஏறத்தாழ பதினெட்டு இலட்சம்தான் இருக்கக்கூடும் என்று அறிவிக் கப்படுகிறது. அத்துடன், மாநில அரசாங்கங்களின் ஊழி யர்களையும் சேர்த்துக்கொள் ளும்பட்சத்தில், அவர்களும் சில இலட்சத்திற்குள்ளாகவே அடங்கிவிடுவர்.

அரசாங்க ஊழியர்களாக உள்ள சில இலட்சம் பேர்கள் மட்டுமே இன்றியமையாத் தேவையினுல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறுர்கள் என்ப தில்லை. அவர்களைவிட ஏராள மான பொதுமக்கள் வாழ்க்கை யில் இருந்துதீர வேண்டிய சாதாரண வசதியும் கிடைக்கப் பெறுது துன்புற்றுக் கிடக்கின் றனர் என்பது உண்மையிலும் உண்மையாகும்.

அரசாங்க ஊழியர்கள் எனப் படுவோர் மொத்த மக்கள் தொகையில் குறைந்த எண் ணிக்கையினரேயாவர். இந்தப் பேருண்மையை முதற்கண் அர சாங்கம் ஒப்புக்கொள்ள வேண்டும்.

ஊதியஉயர்வுக்காக அரசாங்க ஊழியர்கள் ஏன் கிளர்ச்சி செய் தனர்? அவர்கள் கிளர்ச்சி எதனை அடிப்படையாகக் கொண்டு எழுந்தது?

பண்டங்களின் வரைகடந்த விலையேற்றமே அரசாங்க ஊழியர்களை, ஊதிய உயர்வு கோர ஊக்கியது. பண்டங் களின் விலை ஏற்றத்தால், அர சாங்க ஊழியர்கள் வாழ்க்கை பாதிக்கப்படுவதுபோன்றே, மற் றவர்களின் வாழ்க்கையும் பாதிக் கப்படுகிறது. எனவே, தனது ஊழியர்களின் அல்லலைக் களைவ தற்கு அரசாங்கம் முன்வருவது போன்றே, அந்த ஒரே கார ணத்திற்காக அதேவகையான அல்லலுக்கு ஆளாகியுள்ள பொதுமக்களின் குறை களைய வும் அரசாங்கம் முன்வர வேண் டும்.

பண்டங்களின் விலையேற்றம் வரவர உயர்ந்துகொண்டே போகிறது. பண்டங்களின் விலை உயர உயர, அவ்வாறு உயரும் ஒவ்வொரு கட்டத்திலும், பொதுமக்களின் வாழ்க்கைச் செலவும் உயர்ந்துகொண்டே போகிறது. அப்பொழுது, வாழ்க்கைச் செலவை, தங்க ளுக்குக் கிடைத்துவரும் ஊதி யத்தைக் கொண்டு ஈடுசெய்ய முடியாமல் பொதுமக்கள் திண் டாடுகின்றனர்.

இதற்கு ஒரே ஒரு பரிகாரம் தான் இருக்கின்றது. அதாவது, பண்டங்களை தேவையான அள வுக்குக் கூடுதலாக உற்பத்திச் செய்வதும், விலையேறவிடாது கட்டுப்படுத்துவதும், பண்டங் கள் சரிசமமாக மக்கள் அனை வருக்கும் கிடைப்பதற்கு வழி கோலுவதும்தான் இருக்கும் ஒரே ஒரு பரிகாரமாகும்.

இதைத் திறம்பட செய லாற்றுது, பண்டங்களின் விலை யேற்றத்தை மேலும் வளர விட்டுவிட்டு வேடிக்கைப் பார்த் துக்கொண்டு இந்தியப் பேரரசு இருந்துவருமானுல், இரண்டா வது ஊதிய ஆய்வுக் குழுவல்ல- மேலும் பல ஊதியக் குழுக்களை நியமிப்பதாலுைம், அரசாங்க ஊழியர்களின் அல்லலும் நீங் காது—பொதுமக்களின் துன்ப மும் தொலையாது.

'பத்து ஆண்டுகளில் அரை டஜன் நிதி மந்திரிகளா?'

'உறுதியான நிதிக் கொள்கை இல்லையே!'

மக்கள் சபையில் கண்டனக் குரல்

புதுடில்லி, ஆக. 23—

"கடந்த பத்து ஆண்டுகளில் இந்தியாவில், ஒவ்வொரு நிதிமந்திரி யும் தங்கள் தங்கள் பங்காக, புதிய வரிவிதிப்புகளைக் கொண்டு வந்திருக்கின்றனர். இத்துடன் நிர்வாகச் செலவுகளும் அதிகரித்து வந்திருக்கின்றன.

"இது, சர்க்காருக்கு ஒரு உறுதியான நிதிக் கொள்கை இல்லை என்ப தைக் காட்டுகிறது. மேலும், சில நிதிமந்திரிகள் மூர்க்கத்தனமாக நடந்து கொள்கிறுர்கள் என்பது, சர்க்கார் கடைப்பிடித்துவரும் நிதிக் கொள்கையில் ஏதோ அடிப்படைக் கோளாறு இருக்கிறது என்பதை யும் காட்டுவதாகும்"

—என்று மைசூரைச் சேர்ந்த பி. சோ. உறுப்பினரான ஜே. எம். முகம்மது இமாம் என்பார் மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறுர்.

தொடர்ந்து பேசிய அவர் குறிப்பிட்டதாவது :—

"பற்றுக்குறை நிதித் திட்டம் மற்றும் ஆடம்பரச் செலவுகளில் தாராளமாக ஈடுபடுவது போன்ற சர்க்காரின் கொள்கை, பண வீக்கத்திற்கும், மக்களின் கஷ்டங் கள் அதிகரிப்பதற்கும் காரண மாயிருந்திருக்கின்றன. இது ஒரு விவேகமற்ற கொள்கை என்ப தால் உடனடியாகக் கைவிடப் படவேண்டியதாகும்.

"உண்மையில் சர்க்கார் சிக் கனமாயிருக்க வேண்டும் என் பதில் அக்கறை கொண்ட தானுல், உடனடியாகப் பெரிய அதிகாரிகளின் சம்ப ளத்தை, ஒரு குறிப்பிட்ட எல்லை வகுத்து குறைக்க வேண்டும்.

"இப்போது ஆட்சிபீடத்தை அலங்கரிக்கும் மந்திரிமார் களில், சரிபாதிப் பேரைக் கொண்டு மட்டுமே சர்க்கார் காரியங்கள் ஒழுங்காக நடை பெற முடியும். எஞ்சிய பாதிப் பேருக்கு சம்பளமில் லாமல் நீண்ட விடுமுறை தரலாம்.

"சர்க்கார் செலவினங்களில், சிக்கனம் காண்பதற்கான, குழு ஒன்றை அமைக்க வேண்டியது அவசர அவசியமானதாகும்"

வடக்கில் குளித்த 'கழுதை' தெற்கே வந்ததும் 'குதிரை' ஆகிவிடுமா?

கன்னடக் கவிஞரின் கருத்தினைக் கேளீர்

வடக்கில் தவறு நடந்தால் தெற்கில் தண்டனை தருவானேன்?

வெவ்வேறான நிலைமைகள் இருக்கும்போது ஒரேவகையான 'மருந்து' தருவது நீதியா?

திராவிடநாடு இலட்சியம்பற்றி கன்னட இதழ் கருத்து

பெங்களூரிலிருந்து வெளிவரும் கன்னட இதழான 'பிரஜா வாணி' தனது 4—8—57 இதழின் தலையங்கத்தில் குறிப்பிட் டுள்ள பகுதியை இங்கு தருகிறோம் :—

"அசோகனுக்குப்பிறகு ஆங்கில அரசு படரும் வரையிலும் வடக்கு-தெற்கு ராஜ்யங்கள் சரித்திர பூர்வமாகத் தனித் தனியாகவே வளர்ந்து வந்துள்ளன. பூகோ ளப்படியும் தனித்தன்மையுட னேயே ஆதாரபூர்வமாய் இருந் தாலும்சமூகத்தாலும், இதிகாசத் தாலும் இவ்விரு பாகங்களையும் ஒன்று படுத்திய 'புண்ணிய புரு ஷர்கள்' ஏராளம். அதைப் போலவே, அரசியல் ஒற்றுமை ஏற்படுத்தியவர்களும் சிலபேர்.

"ஆனுலும், 'வடவர் நம்மை ஆள்கின்றனர்? என்ற எண்ணம் தென்னுட்டவருக்கும்;'தென்னுட் டினர் அக்ரமக்காரர்; அவர்களை முடிந்த அளவு தூரமாகவே வைத் திருக்க வேண்டும்' என்ற எண் ணம் வடநாட்டினருக்கும் இருக் கவே இருக்கிறது. இந்த எண் ணம் ஒழிய வேண்டும்; பரஸ்பரப் பொறுமை; அவநம்பிக்கை முடிவு பெற வேண்டும்.

"அப்படி ஆகவேண்டுமானுல், தென்னுட்டவரின் அதிருப்திக் கும், வடவரின் பொறுமையின் மைக்கும் மருந்து கண்டுபிடித்தே ஆகவேண்டும்; அதுதான், ஓங்கி வளர்ந்த இமாலயம் போன்ற ஒற்றுமைக்கு வழி.

"சென்னையில் தென்னுட்டின் வாணிபக் கழகத்தில் 'ஈஸ்டர்ன் எகனுமிஸ்ட்' பத்திரிகையின் ஆசிரியர் இதைப் பற்றிப் பேசுட போது, 'சென்ற ஐம்பது ஆண்டு களுக்கும் மேலாகவே தென்னுட்டின் முன்னேற்றத்தை தடைப்படுத்தியுள் ளார்கள்' என்று கூறியிருக்கிறுர். வடக்கிற்கும்— தெற்கிற்கும் வாழ்க்கை, தேவைகள், நிலைமை, வெவ்வேருக இருக்கும்போது, இரண்டிற்கும் ஒரேவகையான மருத்துவம் கொடுக்கும் முறை ஒழியவேண்டும் என்று சொல்லி இருக்கிறுர். இந்த நிலைமையில், 'வடக்கில் ஒரு தவறு நடந்தால் அதற்கு தெற்கில் தண்டனை தருகிறுர்கள்' என்று படம் பிடித்துக் காட்டுகிறுர், அவர்! ஆசிரியர் திரு. தகாஸ்தா அவர் களின் இந்த விமரிசனம் சரியான தே என்பதில் சந்தேகமில்லை.

"வடக்கு-தெற்குப் பிரச்சினை களில் வேண்டிய வேற்றுமை கள் உண்டு ; நிலப்பிரச்சினை, மொழிப் பிரச்சினை, சாதிப் பிரச்சினை, தொழில் முன் னேற்றம் இப்படிப் பல பிரச் சினைகளில் வடக்கிற்கும்— தெற்கிற்கும் வேண்டிய அளவு வேற்றுமைகள் உண்டு.

"இந்த வேற்றுமைகளை எல் லாம் ஒரே அளவுகோலால் அளப்பதும், ஒரே சட்டத்தி ஞல் சரிசெய்வதும் தற்சமயம் சரிவராது.

"தென்னுட்டின் வாழ்க்கைத் தரத்தையும், தொழில் முன் னேற்றத்தையும் வடநாட்டின் மட்டத்திற்கு உயர்த்துவது முத லாவதாகக் குறிப்பிடப்படவேண் டிய பிரச்சினை; இந்த வழியில் தொழில் வெற்றிகரமாய் முன் னேற்றமடைய தனி நிதிக் கமிஷன் அமைக்க வேண்டு மென்று திரு. தகாஸ்தா வற் புறுத்தியுள்ளார்.

"வடக்கிலுள்ள காசியில் கழுதை குளித்து வந்தால்மட்

(4-ம் பக்கம் பார்க்க)

நேபா காகித விலையேற்ற மர்மம் என்ன?

மக்கள் சபையில் அம்பலம்

புதுடில்லி, ஆக. 23—

"அமைச்சர்கள் கூட சிக்கன மாக வாழவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ள தற்போதைய சூழ் நிலையில் நேபா காகித ஆலையில் நடைபெறும் ஆடம்பரச் செலவு களைச் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்" என்று மக்கள் சபையில் ஒரு உறுப்பினர் கூறியிருக்கிறுர்.

'வீண் ஆடம்பரச் செலவின் காரணமாகவே நேபா ஆலையில் செய்யப்படும் காகிதத்தின் விலை அதிகமாகிறது' என்று அவர் மேலும் தெரிவித்தார்.

'பெருமளவு'க்கு வெற்றியாம்!

புதுடில்லி, ஆக. 23—

மதுவிலக்கு தோல்வியடைந்து விட்டதால் அதை ரத்து செய்து விட வேண்டுமெனச் சில உறுப் பினர்கள் மக்கள் சபையில் யோசனை கூறினர்; அதற்கு அமைச்சர் தத்தார் பதிலளிக்கை யில், 'மதுவிலக்கு பெருமளவுக்கு வெற்றி பெற்றுள்ளது என்றே அரசாங்கத்துக்குத் தகவல் கிடைத்திருக்கிறது' என்று கூறி யிருக்கிறுர்.

செய்தி நிருபர்கள் வேலைநேரம் வரையறுப்பு

புதுடில்லி, ஆக. 23—

செய்தித் தாள் அலுவலகங் களில் பணியாற்றும் நிருபர் (ரிப் போர்ட்டர்)களுக்கும் வேலை நேரம் பற்றிய விதி பொருந்து மாறு ஏற்பாடு செய்யப்படும் என் றும், சம்பந்தப்பட்டவர்களைக் கலந்தாலோசித்த பின் உழைக் கும் பத்திரிகையாளர் சட்டத்தின் கீழ் இயற்றப்படும் விதிகளுக்குத் திருத்தம் கொணரப்படும் என்றும் மக்கள்சபையில் அறிவிக்கப்பட் டுள்ளது.

வாழ்க்கைச் செலவுப் புள்ளி

ஆக. 10-ந் தேதியுடன் முடிந்த வாரத்தில் சென்னை நகரில் தொழிலாளர் வாழ்க்கைச் செலவு ஒரு புள்ளி உயர்ந்து 374 ஆக இருந்தது. காய்கறிகள், மீன் ஆகியவற்றின் விலை ஏற்றமே இதற்குக் காரணம்.

ஆசிரியருக்குக் கடிதம் :

பாகல்மேடும் தண்டலமும்

ஐயா,

'அநீதிக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறோம்; ஆகவே நியாயம் சொல்லுங்கள்' என்று தங்களுடைய சுப்ரீம் கோர்ட்டில் 'புகார்' மனு தாக்கல் செய்யும் இந்தியா, அமெரிக்கா, சுவிட்சர்லாந்து போன்ற சனநாயக நாடுகளிலுள்ள குடிமக்களுக்கு இருக்கும் தெம்பும், தன்னம்பிக்கையும், வேறு!

'அநீதி இழைத்தீர்கள்; அதன் விளக்கங்களைச் சொல்லக் கேட்டு, தூக்கு மரத்தில் தொங்குங்கள்' என்று 'உத்தரவு' போடும், கம்யூனிச நாடுகளிலுள்ள மக்கள் நீதிமன்றங்களின் 'நியாய விசாரணைக்கு' உள்ளாகும் குடிமகனின் 'தலைவிதித் தத்துவம்' வேறு!

இரண்டும் நீதிமன்றங்கள் என்ற பெயர் கொண்டவைதாம்!

ஆனால், நீதி கோருபவனுக்கும், 'அநீதி' இழைத்ததின் பட்டியலை விவரிப்பதற்கும் இடையே உள்ள 'சனநாயக சம்பிரதாயம்' இருக்கிறதே, அது பெரும் அளவுக்கு வேறுபடுகிறது.

இந்த இரண்டுக்கும் உள்ள வேறுபாடுகளைத் தெரிந்தவர்கள், காமராசர் கூட்டிய பாகல்மேடு மாநாட்டுக்கும், அண்ணா அவர்கள் கூட்டிய தண்டலம் பொதுநல மாநாட்டுக்கும் உள்ள 'வித்தியாச'த்தை அறிவார்கள்.

பாகல்மேடு மாநாடு ஓர் நாடக நிகழ்ச்சி என்று 'நம் நாடு' இதழில் தீட்டப்பட்டிருந்ததைக் கேலி செய்யும் நோக்கத்தில், 'அண்ணாதுரை கூட்டிய தண்டலம் மாநாடும் ஓர் நாடகம் என்று சொன்னால் பொருந்துமல்லவா?' என்று ஓர் தேசிய தினசரி எழுதியிருக்கிறது.

1947-ல் மவுண்ட் பேட்டன் கூட்டிய இடைக்கால அமைச்சர் அவையில் பண்டித நேருவும், மற்ற முக்கிய தலைவர்களும்தான் இடம் பெற்றிருந்தார்கள்; அந்த மந்திரி சபையை விரும்பாமல் 1947 ஆகஸ்டு 15-ல் நேருவின் தலைமையில் இயங்கும் மந்திரி சபையை ஏன் பிரகடனம் செய்தார்கள்?

இடைக்கால மந்திரி சபையின் சூத்திரதாரி வேறு; அதற்குப் பிறகு ஏற்பட்ட மந்திரிசபையின் சூத்திரதாரி வேறு; இதுதான் மிக முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது.

பாகல்மேடு மாநாட்டின் சூத்திரதாரிகள், அமைச்சர்களும், ஆட்சியை நடத்திச்செல்லும் அதிகாரிகளும் ஆவர்.

தண்டலம் மாநாடு முற்றிலும் மக்களாலேயே கூட்டப்பட்ட மாநாடு.

பாகல்மேட்டில், அழைப்பிதழ் கிடைத்து மக்கள் வந்தார்கள்.

தண்டலம் மாநாட்டில் மக்கள் திரண்டு, அழைப்பிதழ் அனுப்பினார்கள்.

அங்கு—மந்திரி, மக்களுக்கு வரவேற்பிதழ் வாசித்தார்; இங்கு—மந்திரிக்கு மக்கள் வழிகாட்டி அழைத்துச் சென்றார்கள்!

பாகல்மேடு மாநாடு—சார்லஸ் மன்னனால் கூட்டப்பட்ட பிரபுக்கள் சபையை ஒத்தது!

தண்டலம் மாநாடு—கி. பி. 1215-ல் ரன்னிமீட் என்கிற சதுப்பு நிலத்தில் ஜான் மன்னனை மடக்கி மக்கள் கூட்டிய 'மாக்ன கார்த்தா' மாநாட்டை ஒத்தது.

பாகல்மேடு மாநாட்டின் நிகழ்ச்சிநிரல் எப்படித் தயாரிக்கப்பட்டது என்பது எனக்குத் தெளிவாகத் தெரியும்; ஏனென்றால், பாகல்மேட்டுக்கு ¾ மைல் தொலைவிலுள்ள வெங்கல் கிராமம் எனக்கு அத்தை வீடு! வெங்கல் கிராமத்திலிருந்து 'மகஜர்' கொண்டு சென்ற தோழர்களுக்கு எதுபற்றி எழுதித் தரவேண்டும் என்பதும் போதிக்கப்பட்டது

அது மட்டுமல்ல; கடந்த பொதுத் தேர்தலில் 'உற்சாகம் இழந்துபோன' திருவள்ளூர் வட்டாரக் காங்கிரஸ் ஊழியர்களின் மாநாட்டைக் கூட்டுவதுதான் பாகல்மேடு மாநாட்டின் ஆரம்ப முயற்சியே தவிர, மக்களைக் கூட்டிக் குறைகளைக் கேட்பதல்ல!

தண்டலம் மாநாடு இதற்கு முற்றிலும் நேர்மாறானது; தன்னைத் தேர்ந்தெடுத்த மக்களுக்கு எதனை—எப்படிச் செய்யவேண்டும் என்ற பொறுப்புள்ள பிரதிநிதியின் செயலாற்றல் அதில் நன்றாகத் தெரிகிறது.

காமராசரே கூட்டி, உங்கள் குறை என்னவென்று கேட்கும் அவலட்சணநிலையை மாற்றி, அந்தந்த வட்டாரத்துப் பிரதிநிதிகளே மந்திரியை அழைத்து குறைகளைத் தெரிவிக்க வேண்டும் என்று, நாட்டு மக்களிடம் வாக்குகளைப்பெற்று பிரதிநிதிகளாக உருவெடுத்திருக்கும் தோழர்களுக்குத் தனது ஒப்பற்ற செயல் மூலம் உணர்த்திவிட்டார், அண்ணா!

இந்தியாவின் குடி அரசுத் தலைவர் (ஜனாதிபதி) நாட்டில் உள்ள ஆட்சியாளர் அனைவருக்கும் தலைவர்தான்; நமது பெருமதிப்புக்கும் பாத்திரமானவர்தான். ஆனால், அவருடைய நேரடி ஆட்சியின்கீழ் நமது தமிழ் நாட்டில் சட்டமும் சமாதானமும் பொங்கி வழிவது மகாகேவலமான செயல் என்று நாம் நினைப்போமில்லையா? ஜனாதிபதியைவிட பதினாறில் ஒரு பங்கான காமராசர் ஆட்சிதான் நமது ஜனநாயக உணர்வுக்குப் போதிய சான்று கூறுவது என்பதைப்போல், காமராசர் கூட்டும் மாநாடுகளுக்கும், அண்ணா அவர்களைப் போன்ற அந்தத் தொகுதிப் பிரதிநிதிகள் கூட்டும் மாநாடுகளுக்கும் நிரம்ப வேறுபாடு இருக்கிறது.

"கோர்ட்டிலிருந்து ஜட்ஜ் துரை என் விலாசத்துக்கு அனுப்பிய மஞ்சள் கடுதாசியைப் பிரமாதப்படுத்தி கேலி பேசினாயே, நீ இப்போது நூற்றுக்கணக்கான மஞ்சள் கடுதாசிகளை விலை கொடுத்து வாங்கினாயே அதற்கு என்ன பேராம்?"

எதிர்ப்பட்ட எல்லோரையும் ஏமாற்றி ஏப்பம் விட்ட எத்தன் ஒருவன், தனக்குக் கிடைத்த 'இன்சால்வென்ட்' காகிதத்தைக் கேலி செய்த ஒருவர் தனது வீட்டுத் திருமண அழைப்பிதழ் அச்சிட்டுத் திரும்பும்வேளையில் வழிமடக்கி இப்படிக் கேட்டானாம்!

'இன்சால்வென்ட்' காகிதமும், திருமண அழைப்பும் ஒரே நிறத்தில் இருக்கிறது; ஆகவே, இரண்டும் ஒன்றே என்று பேசிய எத்தனுக்கும், பாகல்மேட்டையும்—தண்டலத்தையும் ஒரே பொருளில் உள்ளடக்கும் தோழர்களுக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை.

மு. சண்முகம்
சென்னை-1.

★

இதுவா ஜனநாயகம்?

ஐயா,

"எங்கள் ஊர்ப் பஞ்சாயத்து அவையினர், மக்களாட்சி முறை மாசுறும் வகையிலேயே நடந்து கொள்கின்றனர்.

"பஞ்சாயத்து அவை உறுப்பினர்கள், தலைவர் தேர்தலின் போது, கூடிய மட்டும் தேர்தல் நடைபெற ஒட்டாமல் திரைமறைவில் செய்யக்கூடிய அவ்வளவையும் செய்து, பஞ்சாயத்து அவை அமைப்பு வேலையை ஒருவாறு முடித்துக்கொண்டனர், ஊரில் உள்ள 'பெரிய மனிதர்கள்'. தேர்தல், சனநாயகம், ஊராட்சியில் மக்களின் பங்கு, சுதந்திரம் என்ற முறையில் தென்காசி ஊர் மக்களுக்கு விழிப்பும் அனுபவமும் ஏற்படக்கூடாது என்று நினைக்கும் ஊர்ப் 'பெரிய மனிதர்'களின் சதி வேலையே அது! வளர்ந்து வரும் 'சரிநிகர் சமானம்' என்ற சனநாயக விழிப்பையும், தன்மான உணர்ச்சியையும் அடக்கி விடலாம் என்று கனவு காணும் கிணற்றுத் தவளைகள் அல்லர், அந்தப் 'பெரிய மனிதர்கள்'. ஏகாதிபத்தியம், 'ஈவாப் தர்பார்' ஆசை பிடித்த, படித்தவர்கள் தான் அவர்கள்!

"எங்கள் ஊர்ப் பஞ்சாயத்து அவையால் மக்களின் 'நலன்' கருதி வாசகசாலைகளும், நூல்நிலையமும் நடத்தப்படுகின்றன. அவ்வாசகசாலைகளில் ஒரே கட்சி—ஆளும் கட்சியை ஆதரிக்கும் பத்திரிகைகளும், வார—மாத—ஏடுகளும், புத்தகங்களும் தான் வாங்கப்படுகின்றன. மாற்றுக் கட்சி எண்ணங்கொண்டவர்கள், படிப்பகத்தைப் பொறுத்த மட்டில் கிஞ்சிற்றேனும் மதிக்கப்படவில்லை. மாற்றுக் கட்சிப் பத்திரிகைகளில் ஒன்றுகூட பஞ்சாயத்து அவை வாசகசாலைக்கு வாங்கி மக்கள் படிப்பதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை

"பஞ்சாயத்துத் தேர்தல் தகாதமுறையில் நடந்ததால் மக்களின் அரசியல் போக்கைத் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் அதன்பின் நடந்த சட்ட அவைப் பொதுத் தேர்தல் தெட்டத் தெளிவாகக் காட்டிவிட்டது, தென்காசி பஞ்சாயத்துப் பகுதியிலுள்ள மக்களில் பாதிக்கு மேலானோர் ஆளும் கட்சிக்கு மாற்றுக் கொள்கையை உடையவர்கள் என்று!

"புள்ளிவிவரமாகக் கூறப் போனால் வாக்களித்த 11 447 மக்களில் 5,933 வாக்காளர்கள் காங்கிரஸ் கொள்கைக்கு மாற்று எண்ணம் படைத்தவர்கள். இதை அறிந்த பின்னராவது தென்காசி ஊர்ப் பொதுமக்களுக்கென நடத்தப்படும் வாசகசாலையில் 'நம் நாடு' 'திராவிட நாடு' 'தென்றல்' 'ஜனசக்தி' 'விடுதலை' போன்ற செய்தித் தாட்களை வருவித்து ஊரில் பாதிக்குமேலுள்ள மாற்றுக் கொள்கையினரை மதித்திருக்கலாம். ஊரில் பாதிக்கு மேலுள்ள மாற்று அரசியல் எண்ணம் கொண்ட மக்களின் வரிப் பணத்தாலுந்தான் பஞ்சாயத்து அவை நடைபெறுகிறது என்பதை அவர்கள் சிந்தித்திருந்தால் ஜனநாயக முறைப்படி நடந்திருப்பார்கள்; வாசகசாலையைப் பொறுத்தமட்டில், பலமுறை கடிதங்கள் மூலம் அறிவித்தும் பயனில்லை.

"இச்செய்தித்தாளில் இதைப் படித்த பின்னராவது மாறுபட்ட அரசியல் எண்ணங்கள் கொண்ட ஏடுகள், இதழ்கள் எங்கள் ஊர்ப் படிப்பகங்களில் இடம்பெறும்—மக்களாட்சிமுறை மதிக்கப் பெறும் என்று நம்புகிறேன்.

பி. ஏ. மஜீத்
தென்காசி

★

நீதி கிடைப்பதில் தாமதமாவதற்கு யார் பொறுப்பு?

வழக்கறிஞர்களுக்குக் கட்டுப்பாடு விதித்தால் நிலை மாறுமா?

முன்னாள் நீதிபதியின் கருத்துக்கள்

சென்னை, ஆக. 20—

இப்போதைய நீதி வழங்கும் அமைப்பில் வழக்கறிஞர், நீதிபதி, மற்றும் வழக்காடுபவர் ஆகிய மூவரும் ஒத்துழைக்க வேண்டியிருக்கிறது. இப்படி ஒருவருக்கொருவர் ஒத்துழைக்காவிட்டால், நீதி—நிர்வாகத்தில் ஏற்படும் தாமதத்தைக் குறைப்பது எப்படிச் சாத்தியமாக முடியும்?

"விவாதங்களுக்கு, ஒரு செயற்கையான வரம்பு கட்டுவது என்ற முயற்சி, நீதி நிர்வாகத்தில் ஏற்படும் தாமதங்களைக் குறைக்க சரியான வழியல்ல என்பதை நான் வற்புறுத்த வேண்டிய நிர்ப்பந்தத்திலிருக்கிறேன்.

"பல சந்தர்ப்பங்களில், வழக்கறிஞர்கள் அல்ல—நீதிபதிகள் தான் நீண்ட வாதங்களுக்குக் காரணமாயிருக்கின்றனர். இதற்கு நான் பல உதாரணங்கள் சொல்ல முடியும்; நானே, பலமுறை விவாதங்களைக் குறைத்துக்கொள்ள வேண்டுமென முயற்சித்த சந்தர்ப்பங்கள் உண்டு; அப்போது நீதிபதிகள், தங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களைப் போக்கிக்கொள்வதற்காக, என்னை மேலும் வாதாடக் கூறியிருக்கின்றனர்.

"எனவே, தங்களின் நீண்ட விவாதங்களின் மூலமாக, வழக்கறிஞர்கள்தான் நீதி வழங்குவதைத் தாமதப்படுத்துகின்றனர் என்று, சட்டசபையினர் மட்டுமல்ல—மக்களும் கொண்டுள்ள கருத்து, ஒரு துரதிருஷ்டவசமான தவறாகும்"

என்று, முன்னாள் பெடரல் நீதிமன்ற நீதிபதி எஸ். வரதாச்சாரியார், கோகலே மண்டபத்தில் நடைபெற்ற இளம் வழக்கறிஞர்கள் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசுகையில் அவர் குறிப்பிட்டதாவது :—

"நீதி வழங்குவதில், தாமதம் செய்வது, நீதியை மறுப்பதாகும் என்று கூறுவது சரிதான்; ஆனால், முடிவின் தாரதரங்களைப் பாராமல், உடனடியாக வழங்கப்படுவதுதான் நீதி என்று எண்ணுவது தவறாகும்.

"ஒரு நீதிமன்றத்தை நடத்துவது என்பது, ஒரு குடும்பத்தை நடத்துவது போன்றதே. வழக்கறிஞர்கட்கும்—நீதிபதிகட்கும் இடையே நல்ல கூட்டுறவும் ஒத்துழைப்பும் இல்லாமற் போனால், எந்த விதமான செயற்கைக் கட்டுப்பாட்டு விதிகளும் வழக்கறிஞர்களைக் கட்டுப்படுத்த—அச்சுறுத்த, நீதிபதிக்கு உதவுவதாக ஆகாது."

அம்மையப்பன், வாண்டையாயிருப்புக்கு அண்ணா வருகை

சிறப்பான வரவேற்பு

குடந்தை, ஆக. 22—

21—8—57 காலை, அண்ணா அவர்கள், கடமங்குடி திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்டு திரும்புகையில், வாண்டையாயிருப்பு, அம்மையப்பன், ஆகிய ஊர்களுக்கு வருகை தந்தார்கள். அவ்வமயம் மேற்படி இரு கிராமங்களிலும் அண்ணா அவர்களுக்குச் சிறப்பான வரவேற்புகள் அளிக்கப்பட்டன. அண்ணா அவர்களால் கழகக் கொடி ஏற்றிவைக்கப்பட்டது.

முதறிஞர் அவா நிறைவேறுமா?

ஐயா,

16—8—57 வெள்ளியன்று சென்னை ராஜாஜி மண்டபத்தில் இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ் வல்லுனர்களான திரு. மு. வரதராசனார், திருமதி சுந்தராம்பாள், திரு. பம்மல் சம்பந்தம் (முதலியார்) ஆகிய மூவருக்கும் சென்னை மாநில அரசினர் தங்கப் பதக்கம் அளித்து தமிழைச் சிறப்பித்தனர். இந்தச் செய்தி மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்! அந்த விழாவின்போது முது பெருங்கிழவனார் பம்மல் சம்பந்தனார் அவர்கள், 'நான் இருக்கும் போதே இந்த நாட்டிற்குத் 'தமிழ் நாடு' என்று பெயரிடுக; அதுவே இன்னும் எனக்குப் பெருமகிழ்வளிக்கும்' என்று வேண்டிக்கொண்டிருக்கிறார். அந்த அரும் பெரும் அறிஞரின் ஆவலைப் பூர்த்தி செய்ய அரசாங்கம் இப்போதாவது கட்டாயம் முன்வர வேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

கனக. சுப்பிரமணியம்
சென்னை

நாஞ்சில் மாவட்ட தி. மு. க. செயற் குழுக் கூட்டம்

16—8—57 இரவு 6½ மணிக்கு, மேற்படி செயற் குழுக் கூட்டம், கழகப் பணிமனையில், செயலாளர் தோழர் கி. மனோகரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில், பொறுப்பாளர் கே. சுப்பிரமணியன் அவர்கள், புதிய செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர் கி. மனோகரன் அவர்கள்வசம் பொறுப்பை ஒப்புவித்தார்கள்.

மேலும், டிசம்பர் கடைசி வாசத்தில் மாவட்ட மாநாடு நடத்துவதெனவும், அதற்கென ஒரு இடம் பார்க்க ஒரு குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

நாகர்கோவிலிலுள்ள சர்க்கார் ஆஸ்பத்திரியை மாவட்ட ஆஸ்பத்திரியாக உயர்த்த வேண்டுமெனச் சர்க்காரைக் கேட்டுக்கொண்ட ஒரு தீர்மானமும் நிறைவேறியது.

இலங்கை தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம்

இலங்கை தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம், செயலாளர் தோழர் ஜே. கே. கே. சுந்தரம் அவர்கள் தலைமையில் கொழும்பு கழகப் பணிமனையில் 4—8—57ம் நாள் காலை 10 மணிக்கு நடைபெற்றது.

இலங்கை தி. மு. கழகச் சார்பில் தொழிற் சங்கம் அமைப்பதற்குவேண்டிய புள்ளிவிவரங்களையும், மற்ற விவரங்களையும் திரட்டுவதற்கான ஐந்து உறுப்பினர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது.

பிரசாரக் குழுச் செயலாளராக தோழர் ஜே. சோமசுந்தரம் அவர்களையும், நிதிக் குழுச் செயலாளராக தோழர் பா. மா. சீமோன் அவர்களையும் தேர்ந்தெடுக்கப்பட்டது. இரா. சந்திரன், அரு. ராசன் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும்—பிரதமர் பண்டாரநாயகாவுக்கும் அண்மையில் ஏற்பட்டிருக்கும் ஒப்பந்தம் தமிழ்க் குடிமக்களின் நல்வாழ்வையும், தமிழுக்குக் கிடைக்கவேண்டிய சரிநிகர் தன்மையையும் எதிர்பார்க்கமுடியாதவாறு செய்துவிட்டதாகக் கருதுவதாக செயற்குழு தீர்மானித்தது.

கள்ளக்குறிச்சி தேர்தல் வழக்கு

கழகத்தோழர்களுக்குச் சாதகமாக உயர் நீதிமன்றத் தீர்ப்பு

சென்னை, ஆக. 23—

"செல்லாதவை எனத் தேர்தல் அதிகாரி நிராகரித்துவிட்ட வாக்குகளை மீண்டும் அவை செல்லக்கூடியனவா அல்லது செல்லாதவைதானா என்று பரிசீலிப்பதைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டும்; மேலும் இதனால், செல்லாத ஓட்டுகளை மீண்டும் எண்ணுவதையும் ஒரு இடைக்கால ஏற்பாடாக நிறுத்த வேண்டும்.

"இதைத் தவிர, தேர்தல் நீதிமன்ற உத்தரவின் எந்தப் பகுதியும் இதனால் அமுலாவதிலிருந்து தடுக்கப்படவில்லை"

—என்று, கள்ளக்குறிச்சி தேர்தல் வழக்கு அப்பீல் மனுவிற்குத் தீர்ப்பு வழங்கிய உயர் நீதிமன்றம் கூறியிருக்கிறது.

கள்ளக்குறிச்சி (தெ. ஆ. மாவட்டம்) இரட்டை உறுப்பினர் பகுதியில் வெற்றிபெற்ற நமது கழக உறுப்பினர்களான சி. நடராசன், சி. ஆனந்தன் ஆகியோரின் தேர்தல் செல்லாதென தோல்வியுற்ற கே. பார்த்தசாரதி என்பார் வழக்குத் தொடுத்திருந்தார்.

அதன்பேரில் வழக்கை விசாரித்த நாகபட்டினம் தேர்தல் நீதிமன்றம், செல்லாதென தேர்தல் அதிகாரி நிர்ணயித்த வாக்குகளை மறுபடியும் எண்ண வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தார்.

இந்த உத்தரவிற்கு எதிராக நமது உறுப்பினர்கள் உயர் நீதிமன்றத்தில் ஒரு 'ரிட்' மனு தாக்கல் செய்தனர்.

இந்தமனுவை ஏற்றுக்கொண்டு தீர்ப்பளித்த உயர் நீதிமன்ற நீதிபதி பி. ராஜகோபாலன் அவர்கள் செல்லாதவை எனத் தீர்ப்பளிக்கப்பட்ட ஓட்டுகளை மீண்டும் சரிபார்ப்பதைத் தற்காலிகமாக நிறுத்த வேண்டும் என்றும், அதனால், ஓட்டுகளைத் திரும்பவும் எண்ணுவதையும் தற்காலிகமாக நிறுத்திவைக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டிருக்கிறார்.

தேர்தல் அதிகாரி செல்லாதவை என நிராகரித்த ஓட்டுகளைத் திரும்பவும் சரிபார்ப்பதோ எண்ணுவதோ கூடாது என்ற உத்தரவு வேறெந்த வகையிலும், தேர்தல் நீதிமன்றத் தீர்ப்பைக் கட்டுப்படுத்தாது என்றும் உயர் நீதிமன்றம் கூறியுள்ளது.

நமது கழக உறுப்பினர்களுக்காக, வழக்கறிஞர் வி. பி. இராமன் அவர்கள் வாதாடி இந்த வெற்றியைப் பெற்றுத் தந்திருக்கிறார்.

நெய்வேலியில் அண்ணா தெளிவுரை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"நஷ்டஈடு கொடுக்காமல் எந்த சொத்துக்களையும் எடுக்க எந்த அரசாங்கத்திற்கும் உரிமை கிடையாது; சட்டமும் இடந்தராது. வேண்டுமானால், மதிப்பிடுவதைக் குறைத்து, அதற்குரிய 1947-ம் ஆண்டின் ஓட்டை உள்ள சட்டத்தைக் காட்டியும் கொடுக்கவேண்டியதைக் கொடுத்துத்தான் எடுத்துக் கொள்ளவேண்டும். இதை நீங்கள் கண்டிப்பாக எதிர்க்கலாம்.

"இத்திட்டத்தில் பொறுப்பேற்றுள்ள அதிகாரிகளின் இருப்பிடம் மாடிகளாகவும், சுழல் விசிறிகள் நிறைந்தகூடங்களாகவும் காட்சியளிப்பதைக்காண, இச்சுரங்கத்திட்டத்திற்கு ஒதுக்கிய பணத்தில் ஒருபகுதி அழிவுச் செலவில், சென்றிருக்கும் என எண்ணுகிறேன்.

"இதைப் பார்க்கும்போது, சோஷலிசம், சமதர்மம் என்றெல்லாம் வாயளவில் பேசும் நமது சர்க்கார் வீண் செலவுகள் செய்துகொண்டு ஜமீன்களுக்கும், இராஜாக்களுக்கும் கோடிக்கணக்கில் கடுகளவும் குறையாமல் நஷ்டஈடு கொடுத்து, அவர்களின் பத்து தலைமுறைகளுக்குப் போதுமான வசதிகளைச் செய்து கொடுத்து சொத்துக்களை எடுத்துக் கொள்வானேன்; இப்பகுதியில் உள்ளபடியே உழைக்கும் உழவர் பெருங்குடிமக்களுக்கு நியாயமான நஷ்டஈடு கொடுக்கவும் முன்வராததேன் என்று இந்தச் சர்க்காரை நான் கேட்கிறேன்.

"இந்த சர்க்கார் ஏழைகளைக் கவனியாது பணக்காரர்களை மேலும் பணமுதலைகளாக்கித் தேர்தல் காலத்தில் ஓட்டு வாங்கப் பணம் திரட்டும் 'சூதுமதி' சர்க்கார் என்பதை நான் உணர்கிறேன்.

"இந்த நிலையில் உங்கள் நியாயமான குறைகளை அவ்வளவு சுலபத்தில் இந்த சர்க்கார் தீர்த்துவிடும் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

"ஒன்று கூறுகிறேன்—சோவியத்தின் பனிப் பாலைவனத்தை கோதுமை விளைநிலமாக மாற்றிய விஞ்ஞானிகள் கூடாரத்தில் வாழ்க்கை நடத்துவானேன்? நெய்வேலியில் சுரங்கம் வெட்டும் போது தண்ணீர் பீறிட்டு ஆபத்து ஏற்படும் என்று காரணங்கூறி, உறுதியான கட்டிடங்களை கட்டி இவர்கள் உல்லாச வாழ்வை விரும்புவானேன்? இதை நேரு பெருமகனார் நேரில் அறிந்தும், ஏதும் சொல்ல முடியாமல் சென்றுவிட்டார். காரணம், அவர் தென்னாட்டைப்பற்றி அக்கறையில்லாதவர். இத்திட்டம் எப்படியேனும் நடைபெறட்டும் என்று சென்றுவிட்டார்.

"இந்நிலைகளை விளக்கித்தான், 'தென்னாடு தேய்கிறது—வடநாடு வாழ்கிறது; அந்த நிலை இனியும் கூடாது; நமக்கென்று ஒரு அரசு தேவை; அதுவே திராவிட நாடு' என்று வலியுறுத்துகிறோம்.

"வடக்கே பல கோடி ரூபாய்களில் ஏராளமான திட்டம்; தென்னாட்டிலோ, மேற்கொள்ளப்பட்ட திட்டம் விரயமும், சோகமும் கப்பிய நிலையில்!

"இவைகளையெல்லாம் ஏன் உங்களுக்குக் கூறுகிறேன் என்றால், இன்றைய ஆட்சியின் அதிகாரம் முழுதும் மத்திய சர்க்காரிடம்தான் உள்ளது. மாநில சர்க்காருக்கு எந்தவித அதிகாரமும் கிடையாது. இந்த நெய்வேலித் திட்டமும் மத்திய சர்க்காரால்தான் நடத்தப்படுகிறது.

"இந்த நிலைகளை நான் பார்க்கும் போது, புராண நிகழ்ச்சி ஒன்று கண்முன் தோன்றுகிறது. தில்லை நடராஜப் பெருமானைக் காண ஆவலோடு சென்ற நந்தனாரை, தீயிலிட்டு எரித்ததைப்போல், இந்த நிலக்கரித் திட்டத்தை ஆவலோடு எதிர்பார்த்த உங்களை, உங்கள் வாழ்வை எரியும் சோக நெருப்பில் இட்டு எரிக்கப்பட்டு ஜோதியுடன் கலந்துவிட ஏற்பாடு நடைபெறுகிறதோ என்று ஐயுறுகிறேன்.

"இங்கு கரி எடுப்பதற்குமுன், குமுறும் எரிமலை எழும்பும் நிலையைக் காண்கிறேன்.

"விவசாய மக்களே! உங்கள் குறைகளை ஆரஅமர இருந்து ஆட்சியாளர்களுக்கு அறிவுறுத்துங்கள்; நானும் என்னாலான வழிவகைகளில் முயல்கிறேன். நாளை முதலே சென்னையிலிருந்து கன்னியாகுமரி முனைவரை கூட்டந்தோறும் உங்கள் குறைகளை எடுத்துச்சொல்லி நாட்டு மக்கள் அத்தனை பேர் இதயங்களிலும் ஒலிக்கச் செய்து, அதன் மூலம் சட்டமன்றத்திலும் சமயம் நேரும் போதெல்லாம் சர்க்காருக்கு எடுத்துக்கூறி ஆதரவு திரட்டித் தருகிறேன்.

"முடிவாக உங்கள் கோரிக்கைகள் கவனிக்கப்படவில்லையானாலும், வெற்றி உங்கள் கையிலேதான் உள்ளது. நீங்கள் யாவரும் ஒற்றுமையுடன் கிளர்ச்சி செய்யவேண்டும். சுயநலமில்லாமல் சிறைக்குச் செல்லவும், சிறைக்கும் வீட்டிற்கும் வித்தியாசம் தெரியாமல் இருக்கவும் பயிற்சி அடைந்து உள்ள உரம் பெறுங்கள்.

"எந்த ஒரு சர்க்காரும் மக்கள் சக்தியை அடக்கிவிட்டதாக வரலாறு கிடையாது.

"ஆகவே பாதிக்கப்பட்ட கிராமந்தோறும் சங்கங்களை அமையுங்கள்! ஒற்றுமையுடன் போராட ஆயத்தப்படுங்கள்! நானும், எனது தோழர்களும் உங்கள் கோரிக்கைகள் வெற்றி பெற உறுதுணையாக நின்று போராடுவோம்."

தூளை அண்ணா மன்றத் திறப்பு விழா

27—8—57 மாலை 6-30 மணி அளவில், தூளை காளத்தியப்ப முதலித் தெருவில், தோழர் மு. கன்னியப்பன் தலைமையில் மேற்படி விழா நடைபெறும். தோழியர் சத்தியவாணி-முத்து எம்.எல்.ஏ., தோழர்கள் டி. வி. நாராயணசாமி, ஆர். ஜார்ஜ் ஆகியோர் பேசுவர்.

பேராசிரியர் க. அன்பழகன் சுற்றுப்பயணம்

ஆக. 26: மாலை 4 மணி: நாகர் கோவில் இந்து கல்லூரி.

மாலை 5 மணி: சுத்தமொழி

இரவு 7 மணி: நாகர்கோயில்

27: மாலை 6 மணி:

மேலப்பாளையம்

1,60,000 பேருக்கு வேலை

தபால்—தந்தி இலாகாவில் 2-ம் திட்ட காலத்தில் கிடைக்குமாம்

புதுடில்லி, ஆக. 24—

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், தபால்—தந்தி, மற்றும் டெலிபோன் வசதிகளை விரிவுபடுத்துவதற்கான திட்டங்களை அமுல் செய்வதின்மூலம் மேலும் 1,60,000 பேருக்கு வேலை தர முடியுமென தபால்—தந்தி இலாகாவினர் தகவல் தந்துள்ளனர்.

ஆண்டுதோறும் இலாகாவில் புதிதாக 20,000 முழு நேர ஊழியர்களும், 8,000 பகுதி நேர ஊழியர்களும் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்றும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

இதுவன்னியில், கட்டிடங்கள் கட்டுதல், டெலிபோன் கம்பிகள் போடுதல் முதலிய வேலைகளுக்காகவும் சுமார் 15,000 முதல் 20,000 பேர்வரை தேவைப்படுவர் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

'எதிர் நடவடிக்கை வேண்டும்' என்றார் கம்யூனிஸ்டு!

அறைகூவலை பதிலாகத் தருகிறார் காங்கிரஸ் உறுப்பினர்!

புதுடில்லி, ஆக. 23—

"ஆலைகளும் தொழிற்சாலைகளும் மூடப்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுப்பதற்கு சர்க்கார் தயக்கம் காட்டுகிறது" என்று கம்யூனிஸ்டு தலைவர் எஸ். ஏ. டாங்கே மக்கள்சபையில் குற்றம் சாட்டினார்.

இதற்குப் பதிலாக, மற்றொரு காங்கிரஸ் உறுப்பினரிடமிருந்து ஒரு அறைகூவல் தரப்பட்டிருக்கிறது.

ஜி. டி. சோமானி என்ற காங்கிரஸ் உறுப்பினர், டாங்கே அவர்களுக்குப் பதிலளிக்கும் வகையில் குறிப்பிட்டதாவது:—

"பல காரணங்களினால் சில நெசவாலைகள் மூடப்பட்டிருக்கின்றன; மூடப்பட்டிருக்கும் ஏதாவது ஒரு நெசவாலையின் நிர்வாகத்தை ஏற்று நடத்த கம்யூனிஸ்டு தலைவர் தயாராயிருக்கிறாரா? இப்போதுள்ள சூழ்நிலைகளில், தொழிலாளர்களால் அந்த ஆலையை நடத்திக்காட்ட முடியுமா?"

ஒரு கம்யூனிஸ்டு உறுப்பினர் குறுக்கிட்டு, 'எந்த ஆலையை?' என்று கேட்டிருக்கிறார்.

சோமானி:—"எந்த ஆலையானாலும் சரி; மூடப்பட்டுள்ள பல தொழிற்சாலைகளில் ஏதேனும் ஒன்றை ஏற்பாடு செய்து தரத் தயார்; தொழிலாளர் பிரதிநிதிகள் நடத்தட்டும்."

வடக்கில் குளித்த......

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

டும் தெற்கிற்கு அது குதிரை ஆகுமா?—என்று, ஒரு நூற்றாண்டுக்கு முன்னதாகவே ஒரு கன்னடக் கவிஞர் பாடியுள்ளதை இப்போது கவனப்படுத்திக்கொள்ள வேண்டும்.

"வடவரே பெரும்பாலும் உள்ள மத்திய அரசாங்கமும் திட்டக் குழுவும் தாங்கள் செய்யும் முடிவு—மேற்கொள்ளும் வேலை-நோக்கம் இவற்றினால் மட்டும் தென்னாட்டிற்கும் நன்மை ஏற்படும் என்று எண்ணுவது தவறாகும்.

"இதுவரையில் ஆகியிருக்கும் இந்தத் தவறுகளின் விளைவு தான்இன்று 'திராவிடநாடு' என்ற முற்போக்குக் கிளர்ச்சிக்குக் காரணம்.

"ஆசிரியர் தகாஸ்தா 'கேரளத்தில் கம்யூனிஸ்டு அரசாங்கம் ஏற்பட்டதற்கும் இதுதான் காரணம்' என்கிறார். இந்த வாதத்திலுள்ள உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டியநிலை வந்துள்ளது.

"மத்திய அரசாங்கமும் காங்கிரஸ் கட்சியும் இந்த பிரச்சினையில் கவனம் செலுத்தட்டும் என்று எதிர்ப்பார்ப்பது தவறாகாது"

நகரசபை வரியைச் செலுத்தாததன் விளைவு

காங்கிரஸ் உறுப்பினர் நால்வர் பதவி இழக்கின்றனர்

கோட்டயம், ஆக. 21—

நகர சபைக்குரிய வரியைச் செலுத்தாததன் விளைவாக, காங்கிரஸ் கட்சியை சேர்ந்த நான்கு நகரசபை உறுப்பினர்கள் தங்கள் பதவியை இழக்க நேர்ந்துள்ளது.

அவர்களை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கிவிட்டதாக கோட்டயம் நகரசபை ஆணையாளர் அறிவித்திருக்கிறார் என்று தெரிய வருகிறது.

இனி இந்நகர சபையில் காங்கிரஸ் உறுப்பினர்களின் எண்ணிக்கை 15-லிருந்து 11 ஆகக் குறையும்.

ஆதாரமில்லையாம்!

தாமோதர் பள்ளத்தாக்கு கார்ப்பரேஷன் தலைவர் மீது இலஞ்சக் குற்றச்சாட்டு சம்பந்தமாய் சர்க்கார் நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கவில்லை என்றும், சர்க்கார் முன்னுள்ள தகவல்களின்படி அந்தக் குற்றச்சாட்டுக்கு ஆதாரமில்லை என்று சர்க்கார் கருதுகிறதென்றும் மாநிலங்கள் சபையில் மத்திய அமைச்சர் பட்டீல் தெரிவித்துள்ளார்.

சோஷலிஸ்டுகளுக்குச் சிறைத் தண்டனை

சேலம், ஆக. 23—

இம்மாதம் 8-ந் தேதியன்று சேலம் கலெக்டர் அலுவலகம் முன்பு மறியல் செய்ததாக ஆறுமுகம் முதலிய 6 சோஷலிஸ்டு தொண்டர்கள்மீது வழக்குத் தொடரப்பட்டது. அத்துமீறி கலெக்டர் அலுவலக காம்பவுண்டிற்குள் நுழைந்து மறியல் செய்ததாக அவர்கள்மீது குற்றம் சாட்டப்பட்டது.

அந்த 6 பேர்களுக்கும் தலைக்கு 3 மாதம் சாதாரண காவல் தண்டனை விதித்து சேலம் நகர சப்-மாஜிஸ்திரேட் தீர்ப்பளித்தார்.

பீடித் தொழிலாளர்கள் அறப்போர்

சேலம், ஆக, 23—

போலீசாரின் தடையுத்தரவை மீறி மறியல் செய்ததாக 26 பீடித் தொழிலாளர்களை 23-ந் தேதியன்று போலீசார் கைது செய்தனர். இதுவரை கைது செய்யப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை 324 ஆக உயருகிறது. அவர்களில் 13 பேர்களின்மீதுள்ள வழக்கு விசாரிக்கப்பட்டு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

★

விடுதலை செய்யக் கோரிக்கை

சேலம் நகரில் மறியல் செய்ததற்காகக் கைது செய்யப்பட்ட பீடித் தொழிலாளர்கள் அனைவரையும் நிபந்தனையின்றி விடுதலை செய்யக் கோரியும், நகரில் அமுல் படுத்தப்படுகிற போலீஸ் தடையுத்தரவை வாபஸ் பெறக் கோரியும் சேலம் மாவட்ட கலெக்டரின் அந்தரங்க உதவியாளர் ஆர். சுப்பிரமணியத்தினிடம் ஒரு மனு கொடுக்கப்பட்டது. இது பற்றிக் கவனிக்கத் தங்களுக்கு அதிகாரம் இல்லை என அவர் பதில் கூறியதாகத் தெரிகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. செழியன் எம்.ஏ., அவர்களால் ஆந்திரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.